Australian Government
Department of Home Affairs

அவுஸ்திரேலிய சமூகத்தின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிசெய்யும் பொருட்டு கடுமையான எல்லை கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அவுஸ்திரேலியாவிற்கு செல்வதற்கோ, அவுஸ்திரேலியாவிலிருந்து வெளியேறுவதற்கோ தற்சமயம் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட விமான சேவைகளே செயற்படுவதுடன், இந்நேரத்தில் உங்களால் பயணிக்க முடியாது. பயணக்கட்டுப்பாடுகளில் அடிக்கடி மாற்றங்கள் ஏற்படலாம். ஆகவே அடிக்கடி பக்கத்தை பாருங்கள். பார்க்கவும்: தேசிய அமைச்சரவை ஊடக அறிக்கை.

பாதுகாப்பு வலயத்திலிருந்து வரும் தனிமைப்படுத்தப்படல் அவசியமற்ற விமானங்களில் வருகைத்தராத அனைத்து அவுஸ்திரேலிய பிரஜைகள் உட்பட நாட்டுக்குள் வரும் அனைத்து பயணிகளும், உங்கள் விமானம் வந்திறங்கும் பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் போன்ற ஏற்பாடு செய்யப்பட்ட வசதிகள் கொண்ட இடத்தில் 14 நாட்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு கட்டாயமாக உட்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். பயணிகளுக்கான கொரோனா வைரஸ் (COVID-19) அறிவுரைகள் ஐப் பார்க்கவும். உங்களின் சுய தனிமைப்படுத்தலுக்கான செலவுகளை நீங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். தனிமைப்படுத்தல் பற்றிய தகவல்களை தெரிந்துக்கொள்ள, அரச அல்லது பிராந்திய சுகாதார திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

# நான் வீசாவுக்கு விண்ணப்பிக்க வேண்டும்

இந்த தருணத்தில் அவுஸ்திரேலிய வீசாவிற்கு விண்ணப்பிக்க வேண்டியதன் அவசியத்தை நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் மற்றும் பயண கட்டுப்பாடுகள் மற்றும் வீசா செயலாக்கம் குறித்த புதுப்பிப்புகளுக்கு இந்த பக்கத்தை தவறாமல் பார்க்கவும்.

### வீசா செயலாக்க ஆயத்தங்கள்

பின்வரும் காரணங்கள் உங்களுக்கு பொருந்தாவிட்டால் உங்களால் அவுஸ்திரேலியாவுக்கு வர இயலாது:

- நீங்கள் இருப்பது சலுகைப்பெறு வகையில்
- தற்போது வழமையில் உள்ள பயணக் கட்டுப்பாடுகளில் உங்களுக்கு தனிப்பட்ட சலுகை வழங்கப்பட்டுள்ளது, அல்லது
- நீங்கள் பாதுகாப்பு வலயத்திலிருந்து வரும் தனிமைப்படுத்தப்படல் அவசியமற்ற விமானங்களில் வருகைத்தருகிறீர்கள்.

உங்களிடம் செலுப்படியாகும் வீசா இருக்க வேண்டும். வீசா தெரிவுகளைப் பாருங்கள்.

கோவிட் -19 காரணமாக, சில வீசா செயலாக்க நேரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன மற்றும் விண்ணப்பங்கள் இறுதி செய்ய அதிக நேரம் ஆகலாம். தற்போதைய பயணக் கட்டுப்பாடுகளிலிருந்து பயணச் சலுகை அளிக்கப்பட்ட அல்லது பாதுகாப்பான வலயத்திற்குள் பயணிக்கும் பயணிகளுக்கான வீசா விண்ணப்பங்களுக்கு நாங்கள் முன்னுரிமை அளிக்கிறோம்.

உங்களுக்கு வீசா வழங்கப்படும் வரை (நீங்கள் நியூசிலாந்து குடிமகனாக இல்லாவிட்டால்) உங்கள் பயண ஏற்பாடுகளை ஊர்சிதப்படுத்திக் கொள்ளல் ஆகாது.

சந்தர்ப்பம் கிடைக்கும் போது, இணையம் மூலம் உங்கள் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் சிறந்த்து. இது செயலாக்க ஏற்பாடுகளை முறைப்படுத்த உதவுகிறது.

## அவுஸ்திரேலியாவுக்கு வருகைத்தரல் – வீசா தெரிவுகள்

தற்பொழுது நீங்கள் ஓர் இலத்திரனியல் பயண உரித்திற்கு (Electronic Travel Authority, ETA) இணையம் மூலமோ விமான சேவை நிறுவனம் மூலமோ பயண முகவர் மூலமோ விண்ணப்பிக்க முடியாது.

பயணக் கட்டுப்பாடுகள் அமுலில் இருக்கும் போது குறிப்பிட்ட சில கடவுச்சீட்டுக்களை வைத்திருப்பவர்கள் ETA க்கு விண்ணப்பிக்கக்கூடிய ஒரு மொபைல் செயலி (AustralianETA) தற்போது சோதனை மட்டத்தில் உள்ளது.

பின்வரும் சந்தர்ப்பங்களில் நீங்கள் அமையப் பெற்றால் ETA க்கு விண்ணப்பிக்க AustralianETA ஐப் பயன்படுத்தலாம்:

- நீங்கள் அனைத்து ETA தகைமை தேவைப்பாடுகளை பூர்த்தி செய்திருத்தல்
- புருனே, கனடா, ஹொங்கொங் (SAR சீனா), ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர், தென் கொரியா அல்லது அமெரிக்காவின் கடவுச்சீட்டை வைத்திருப்பவர்.

AustralianETA செயலிப் பயன்பாட்டுக்கு, திருப்பிச் செலுத்தப்படாத சேவைக் கட்டணமாக $20 அறவிடப்படும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ETA உங்களை அவுஸ்திரேலியாவில் தொழில்புரிய அனுமதிக்காது. அதேவேளை மூன்று மாதங்களுக்கு மேல் தங்கவும் அனுமதிக்காது.

App Store (Apple) அல்லது Google Play Store (Android) இலிருந்து நீங்கள் AustralianETA செயலியை இலவசமாகப் பதிவிறக்கம் செய்யலாம்.

AustralianETA கணிப்பில் சேர்க்கப்படாத பயணிகள் தங்கள் தேவைகளுக்கு ஏற்ற இன்னுமொரு வீசாவிற்கு ImmiAccount வாயிலாக இணையம் மூலம் விண்ணப்பிக்கலாம்.

- ஐரோப்பிய கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் eVisitor (உப பிரிவு 651) வீசாவிற்குத் தகுதி பெறலாம். eVisitor வீசா விண்ணப்பத்திற்கு வீசா விண்ணப்பக் கட்டணமோ (VAC) சேவைக் கட்டணமோ கிடையாது.
- ஏனைய கடவுச்சீட்டுகளை வைத்திருப்போர் தொடர்புடைய துறையில் ஒரு வருகைதருநர் (உப பிரிவு 600) வீசாவிற்கு தகுதி பெறலாம்.

உங்களுக்கு ETA, eVisitor அல்லது வருகைதருநர் வீசா வழங்கப்பட்டால், நீங்கள் அவுஸ்திரேலியாவுக்குச் செல்வதற்கு பரிசீலிக்கப்பட்டதாக அல்லது விலக்கு அளிக்கப்படுவதாக அது அர்த்தமல்ல. நீங்கள் பாதுகாப்பு வலயத்துக்குள் பயணம் செய்யாவிட்டால், ஒரு பயணச் சலுகைக்கு விண்ணப்பிக்க வேண்டியதுடன், உங்கள் உரிமைகோரல்களை ஆதரிக்க ஆதாரங்களை வழங்க வேண்டும்.

## சேவைத் தடங்கல்கள்

வீசா விண்ணப்ப செயல்முறை தொடர்பான சில சேவைகள் COVID-19 ஆல் பாதிக்கப்படலாம். அதேவேளை நாங்கள் நம்பியிருக்கும் பல சேவைகள் பரவலாக கிடைப்பதுமில்லை.

இதில் வெளிநாட்டு வைத்திய குழாம் (கீழே காண்க), ஆங்கில மொழிச் சோதனை வசதிகள், உயிரியல் தரவுச் சேகரிப்பு மையங்கள் ஆகியவை அடங்கும்.

இந்த சேவைகள் கிடைக்கவில்லை என்றால் கூட பல விண்ணப்பதாரர்களால் வீசா தகைமைகளை பூர்த்தி செய்ய முடியாது. பூரண பரிசோதனைக்கும் கோரப்பட்ட தகவல்களை வழங்கவும் விண்ணப்பதாரர்களுக்கு மேலதிக நேரம் வழங்கப்படும்.

## வீசாவுக்கான வைத்திய விண்ணப்பங்கள்

COVID-19 காரணமாக வீசா வைத்திய சேவைகளுக்கு ஏற்படும் இடையூறுகள் குறித்து சேவை பெறுனர்கள் அறிந்திருக்க வேண்டும்.

எங்கள் விசா செயலாக்க அதிகாரிகள் குறித்த இடையூறுகள் பற்றி அறிந்திருக்கிறார்கள். உங்கள் விசா விண்ணப்பத்தை கருத்தில் கொள்ளும்போது நீட்டிக்கப்பட்ட கால வரையறையை நாங்கள் கணக்கில் எடுத்துக்கொள்வோம். 'எனது சுகாதார அறிவிப்புகள்' தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. உங்கள் வீசா விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டவுடன் நீங்கள் விரும்பும் வீசாவுக்கான உடல்நலப் பரிசோதனைகள் உட்பட உடல்நலத் தகைமைகள் தீர்மானிக்கப்படும்.

உங்கள் *உடல்நலப் பரிசோதனைக் கோரிக்கைக்* கடிதத்தில் கோரப்பட்ட காலக்கெடுவுடன் நீங்கள் உடல்நலப் பரிசோதனைக்கு உட்படுத்த முடியாவிட்டால், உங்கள் ImmiAccount மூலம் விபரங்களை இணைத்து துறைக்கு அறிவிக்க வேண்டும்.

நீங்கள் இன்னும் வீசா விண்ணப்பத்தை தாக்கல் செய்யவில்லை அல்லது குடிவரவு மருத்துவ பரிசோதனையை மேற்கொள்ளுமாறு கோரப்படவில்லை என்றால், இந்த நேரத்தில் அவுஸ்திரேலியாவில் உள்ள விசா மருத்துவ சேவை கிளினிக் அல்லது வெளிநாட்டு தொடர் கிளினிக்கை தொடர்பு கொள்ள தேவையில்லை.

## உயிரியல் ஆதாரங்களை சேகரிப்பதற்கான சந்திப்புகள்

அவுஸ்திரேலிய விசா விண்ணப்ப மையங்கள் (AVACs) மற்றும் அவுஸ்திரேலிய உயிரியல் தரவுச் சேகரிப்பு மையங்கள் (ABCCs) மூலம் உயிரியல் தரவுச் சேகரிப்புச் சேவைகளை மீண்டும் தொடங்குவது உள்நாட்டு COVID-19 கட்டுப்பாடுகளின் அடிப்படையிலேயே இடம்பெறும்.

அதேவேளை, சேகரிப்பு மையங்கள் விசாரணை மற்றும் இணையம் மூலம் தாக்கல் செய்வதற்கான உதவிகள் சேவைகளை வழங்கும்.

உங்கள் தற்போதைய *தனிப்பட்ட அடையாளக் குறிகாட்டிகள் (உயிரியல் தரவு) கடிதம் வழங்குவதற்கான தகைமையை* முன்பதிவு செய்வதற்கும் சந்திப்பில் கலந்துகொள்வதற்கும் பயன்படுத்தலாம். நீங்கள் வீசாவுக்காக இணையம் மூலம் விண்ணப்பித்திருந்தால், இந்த கடிதத்தின் நகல் உங்கள் ImmiAccount இல் காணப்படும்.

சந்திப்பை ஏற்பாடு செய்ய உங்கள் உள்ளூர் AVAC அல்லது ABCC ஐத் தொடர்பு கொள்ள வேண்டும். உங்கள் நாட்டுடன் தொடர்புகொள்ளத் தகவல்கள் மற்றும் அலுவலக நேரங்கள் உட்பட AVAC கள் மற்றும் ABCC களில் புதுப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு எங்கள் வலைத்தளத்தைப் பார்க்கலாம். பார்க்கவும்: அவுஸ்திரேலியாவுக்கு வெளியேவுள்ள அலுவலகங்கள்

உள்நாட்டில் அமுலிலுள்ள COVID-19 கட்டுப்பாடுகள் காரணமாக சில இடங்களில் நீங்கள் உயிரியல் தரவுகளை வழங்க முடியாது போகலாம் என்பதை நாங்கள் அறிவோம்.

பின்வருவன உங்களுக்கு பொருந்துமாயின் நீங்கள் எங்களைத் தொடர்புக்கொள்ளத் தேவையில்லை:

- உங்கள் பகுதியில் உள்ள சேகரிப்பு மையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது
- சேகரிப்பு மையத்திற்குப் பயணிப்பதைத் தடுக்கும் வகையில் உங்கள் பகுதி முடக்கப்பட்டுள்ளது.